2013 மே 8]

433—

கால்நடை மருந்தகம்

***7889—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், இட்டமொழியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், இட்டமொழி கிராமத்திலே, அரசு விதிகளுக்குட்பட்டு 3,000 கால்நடை அலகுகளுக்கு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விலையில்லா பசு மாடுகள், கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தினால் கிராமப்புறங்களில் வெண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் அனைத்துப் பயனாளிகளும் பெண்களே என்பதால், வீட்டுப் பொருளாதாரம் வளர்வதுடன், நாட்டின் பொருளாதாரமும் வளர்கிறது. இது ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் ஆதாயமாக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் விலையில்லா கறவை மாடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்;

[2013 மே 8

"தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு,
சம்சாரி வாழ்விற்கு ஒரு பசுமாடு,
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு (மேசையைத் தட்டும் ஒலி)
பூப்போல வைத்துனை காப்பது பாடு"

என்ற புரட்சித் தலைவரின் பாடலை நினைவூட்டுகிறது. ஆடு, மாடுகளைப் பூப்போல காக்கவேண்டும். எனது நாங்குநேரி தொகுதியிலுள்ள இட்டமொழி கிராமத்திற்கு இந்த ஆண்டிலேயே கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இட்டமொழி கிராமத்திலே, அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைச் சேர்த்து, அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கின்ற அளவிற்கு இருக்கின்றது. இருந்தாலும், அரசு விதிகளின்படி, முதலிலே ஒரு கால்நடை கிளை நிலையம்தான் அமைக்கப்படும். அதற்குப்பிறகுதான், upgrade செய்வோம். தரமுயர்த்தித்தான் மருந்தகம் அமைக்க முடியும். நேரடியாக மருந்தகம் அமைக்க முடியாது. எனவே, இங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்து, பின்னர் மிக விரைவாக அது கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தித் தரப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்டமொழி கிராமத்தைச் சுற்றிலும் 100 கிராமங்கள் அமைந்துள்ளன. அந்தக் கிராமங்களில் 10,000 ஆடுகளும், 10,000 கோழிகளும் உள்ளன. இந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்க வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பறப்பாடி கால்நடை மருந்தகத்திற்கும்,

12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திசையன்விளைக்கும்தான் செல்ல வேண்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றால், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக கால்நடை மருந்தகம் திறக்க ஆணையிடுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என எனது கட்சியின் சார்பாகவும், என் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 434, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

434—

கனிமப் பாதுகாப்பு

***28280—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்பாறை, மணல் போன்ற கனிமங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பான்மையான பகுதிகள் மலைப் பகுதி பாதுகாப்பு குழுமத்தின்கீழ் வருகின்றன. மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் குறிப்பாணையின்படியும், குவாரிகளிலிருந்து எடுப்பதற்கு முன்பாக சுற்றுச்சூழல் துறையின் தடையில்லாச் சான்று பெறப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்ட எல்லையில் காவல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, கனிமங்கள், பாறைக் கற்கள், மண் மற்றும் மணல் ஆகியவற்றை அனுமதியின்றி எடுத்துச் செல்வதை முற்றிலும் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிம வளங்கள் முழுவதையும்